
பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷிகள் அருளிய

ஸ்ரீ அருணாசல அட்சர மணமாலை

தெளிவுரை : எம். எஸ். சந்திரசேகர், புதுவை

(ஞானரத சிறப்பு வெளியீடு - ஜூலை 2004)




ஸ்ரீ ரமணாச்ரமம்
திருவண்ணாமலை - 606 603
2004

பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகள் அருளிய

ஸ்ரீ அருணாசல அட்சர மணமாலை

தெளிவுரை : எம்.எஸ்.சந்திரசேகர், புதுவை

(ஞானரத சிறப்பு வெளியீடு - ஜூலை 2004)



ஸ்ரீ ரமணாச்ரமம்
திருவண்ணாமலை - 606 603
2004

பதிப்புரை

பகவான் ரமணர் 1879-ல் மதுரைக்கு அருகில் உள்ள திருச்சுழியில் பிறந்தவர். இதுவரை உலகம் கண்டறியாத சகஜ ஞானியாக அவர் விளங்கக் காரணமாக அவரது வாழ்வில் இரு அகச்சான்றுகள் உள்ளன.

சிறுவயது முதல் தனக்கு "அருணாசல" ஸ்புரணம் (நினைப்பு: தாக்கம் - முதல் காரணம்) இருந்து வந்ததாக பகவான் ரமணர் குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாகவே அவர் தனது மரண அனுபவத்தைத் (இரண்டாவது காரணம்) தொடர்ந்து அருணாசலத்தை (திருவண்ணாமலையை) அடைந்து தனது தேக வாழ்வின் இறுதிவரை 54 ஆண்டுகள் திருவண்ணாமலையை விட்டு ஒருகணமும் அகலாமல் வாழ்ந்து வந்தார்.

"ஞானத் தபோதனரை வா என்று அழைக்கும் மலை", "நினைக்க முக்தி அருளும் அண்ணாமலை", "ஞானத் திரளாய் நின்ற பெருமான்" என்ற மகாவாக்கியங்கள் பல நூற்றாண்டுகளாக வழக்கில் இருந்து வருகின்றன. இவற்றின் உண்மையை ஜீவர்கள் உணர்ந்து முக்தி இன்பம் துய்க்க வேண்டும். இதற்காகவே பரம்பொருள் மானிட உருவம் தாங்கி பகவான் ரமணராக அருணாசலத்தில் வாசம் செய்து வந்ததாகக் கொள்ள வேண்டியுள்ளது. உலகப் பற்றேதும் இல்லாத ரமணருக்கு அண்ணாமலை மீது உள்ள பற்றை தனது அருணாசல ஸ்துதி பஞ்சகத்திலும் மற்ற பாடல்களிலும் நன்கு விளக்கியுள்ளார். ("அண்ணாமலை என் ஆன்மா" - ஆன்ம வித்தை கீர்த்தனம், பாடல் 5). "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்வார் செல்வர் சிவபுரத்தின் உள்ளார்" என்ற மணிவாசகரின் வாக்கின்படி அட்சர மணமாலைக்கு இதுவரை ரமண அடியார்களின் பலஉரை நூல்கள் உள்ளன.

இவை அனைத்தையும் நன்கு ஆராய்ந்து புதுவை ரமண கேந்திரத் தலைவர் திரு.எம்.எஸ்.சந்திரசேகர் மிக எளிய முறையில் ஒரு தெளிவுரை உருவாக்கியுள்ளார். அட்சர மணமாலையைப் படிக்கும்போதே உரையையும் மனதில் கொள்ளும் வண்ணம் பாடல்களுக்கு பொருள் அமையும்படி இச்சிறுநூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. அட்சர மணமாலையைப் பொருளுடன் அன்பர்கள் அனைவரும் ஓதியுணர்ந்து பேரின்பம் அடைவார்களாக!

ஸ்ரீ பகவான்

மதுரைக்கு 60 கி.மீ. தொலைவிலுள்ள திருச்சுழியில் அழகம்மையார் - சுந்தரனார் தம்பதிகளுக்கு 1879, டிசம்பர் 30-ஆம் நாள் இரண்டாவது மகனாக வெங்கடராமன் என்ற ஸ்ரீ ரமண பகவான் அவதரித்தார். அப்பொழுது பிரசவம் பார்க்கவந்த பார்வையற்ற ஒரு மூதாட்டிக்கு ஒளிவெள்ளமாய் ஓர் ஜோதி தரிசனம் கிடைத்தது.

வெங்கடராமனின் பள்ளிப் பருவத்தில், விளையாட்டில் இருந்த நாட்டம் படிப்பில் இல்லை. அபார ஞாபகச் சக்தி இருந்தாலும் புத்தகப் படிப்பு ரசிக்கவில்லை. அவரது 16-வது வயதில் தனது சிற்றப்பாவின் வீட்டில் வசித்துவருகையில், ஒரு பேரதிசயம் நடந்தது. திடீரென்று வெங்கட ராமனுக்கு மரணபயம் தோன்றிற்று. தான் இறக்கப் போகிறோம் என்ற எண்ணம் தீவிரமடையவே, அவர் அதை எதிர்கொள்ளும் வகையில் உடம்பை நீட்டிப்படுத்து, கண்-களையும், வாயையும் மூடி எந்தவொரு சலனமும் இல்லாமல் கிடந்தார். இறந்தபிறகு உடம்பை எரிப்பார்கள். ஆனாலும் நம்முள்ளே, "நான்,

நான்" என்ற ஒன்று விளங்கிக் கொண்டிருக்கிறதே! அப்படியென்றால், "இறப்பது உடம்பேயன்றி 'நான்' என்று விளங்கிக்கொண்டு இருக்கும் ஆத்மா அல்ல" என்ற பேருண்மை புலனாயிற்று. அத்துடன் வெங்கடராமனுக்கு மரணபயம் அடியோடு ஒழிந்து, ஜீவன்முக்தராக, பூரண ஞானியாக மலர்ந்துவிட்டார்.

தன்னுள்ளத்தே சிறுவயது முதல் மிகப்பெரியதென விளங்கிக்கொண்டிருக்கும் அருணாசல அருட்தந்தையை நாடி, 1896-ஆம் ஆண்டு செப்டம்பர் 1-ஆம் தேதி திருவண்ணாமலை வந்தடைந்தார். "தந்தையே உன் ஆணைப்படி வந்தடைந்து விட்டேன்" என்று கூறி சுகக்கடல் பொங்க, சொல் உணர்வு அடங்க, அருணை-யிலேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டார். வீட்டிற்குத் திரும்பி அழைக்க வந்த அன்னைக்கு எழுதியருளிய வாக்கியங்களாகிய "நடப்பது என் தடை செய்யினும் நில்லாது; நடவாதது என் முயற்சிக்கினும் நடவாது" என்பதே பகவான் அருளிய முதல் உபதேசமாகும்.

சில ஆண்டுகளில் தாயும், பகவானுடன் வந்து சேர்ந்தார். விரூபாட்சி குகையிலும், கந்தாச்ரமத்திலும் தொண்டர்களுக்கும்

பக்தர்களுக்கும் அமுது செய்வித்த அன்னைக்கு 1922-ஆம் ஆண்டு மே மாதம் 19-ஆம் தேதி, பகவான் முக்திப்பேறு அளித்தார். அன்னைக்கு மலையடிவாரத்தில் பாலி தீர்த்தக்கரையில் ஓர் அழகிய ஆலயம் அமைத்தார். அது இன்று மாபெரும் ரமணாச்ரமமாக வளர்ந்திருக்கின்றது.

பகவான் ரமணர் பெரும்பாலும் மௌன தியானத்திலேயே உபதேசம் செய்தார். அவரது சன்னிதானத்தில் அனைவரும் ஈடு, இணையில்லா சாந்தியைப் பெற்றனர். மனநிம்மதியின் பொருளை முழுமையாக உணர்ந்தனர். ரமணரின் அரவணைப்பில் மிருகங்கள்,பறவைகள் எல்லாம் பரவசமடைந்தன. ஒரு எடுத்துக்காட்டாக, லட்சுமி என்ற பசு பகவானுடன் ஒட்டி உறவாடி முக்தி அடைந்ததை பகவான் ஒரு வெண்பா பாடலின் மூலம் உறுதிப்படுத்தியுள்ளார். அதற்கு ஒரு சமாதியும் ஆஸ்ரமத்தில் செய்வித்தார். பகவான் ரமணரின் விசார மார்க்கம் என்கிற ஞான யோகம் மிகவும் அற்புதமானது. "நான் யார்?" என்பதை அறிவதே அதன் மையக்கருத்து. "உடம்புதான் நான்" என்னும் மாயையை நீக்கி, "மனம், புத்தி, இந்திரியங்கள் நான் அல்ல" என்ற உண்மையை

நிரூபித்து, "என்றும் அழியாத ஆத்மாதான் நான்" என்ற பேருண்மையை நமக்குப் பகவான் போதித்தார்.

மனம் என்பது எண்ணங்களின் குவியல் தான். எண்ணங்கள் இல்லாதபோது, மனம் என்ற ஒன்று இல்லை. எண்ணங்கள் அழிய, மனம் தனது பிறப்பிடமான ஆத்மாவில் அடங்கி, ஒடுங்கிவிடும். ஒவ்வொரு எண்ணமும் எழும் போது, "இது யாருக்கு எழுகிறது?" என்று கேட்டு, அது எனக்கு என்றதும், "நான் யார்?" என்று விசாரித்தால் அந்த எண்ணம் மறைந்து விடும். இப்படிப் பழகப் பழக மனம் முழுமையாக உள்முகப்பட்டு, ஆத்மாவில் ஒடுங்கிவிடும். உண்மையான "நான்" என்னும் ஆத்மாவே நிலையாக எஞ்சியிருக்கும். இதுதான் ரமண மகாயோகத்தின் சாரம்.

பக்தி வழியில், தான் வணங்கும் இறைவனையோ அல்லது குருவையோ முழுமையாகச் சரணடைந்துவிட்டால், மனம் ஒடுங்கி, எண்ணங்கள் அழிந்து, ஆன்மசுகம் பெறலாம் என்றும் பகவான் அருளியிருக்கிறார். இத்தகைய அற்புத ஆன்மீக தத்துவத்தை சர்வ

எளிமையாக, எவரும் புரிந்துகொண்டு பயில பகவான் அருளிய பாடல்களே உள்ளது நாற்பது, உபதேச உந்தியார் போன்ற உபநிஷதங்களுக்கு ஒப்பான, பகவான் காட்டிய நேர்வழியின் விளக்கங்களாம்.

முதல் கட்டமாக மனம் ஒருநிலைப்பட ஒரு அற்புத தோத்திரப் பாடலை இயற்றி, அதற்கு அருணாசல அட்சர மணமாலை என்று பெயர்சூட்டி, தினமும் பாராயணம் செய்து, பக்குவப்பட்டு, உயர்நிலையடையவும் பகவான் ரமணர் வழிவகுத்துள்ளார். இத்தகைய உலக மகாகுருவை, உலகெங்கிலுமுள்ள ஆன்மீக வேட்கை-யுடையவர்கள் அண்டி, அருளாசி பெற்று உய்யும் வழி அடைந்தனர் என்று கூறவும் வேண்டுமோ?

பகவான் தனது பூத உடலை 1950, ஏப்ரல் 14 ஆம் தேதி நீத்தார். அப்பொழுது ஒரு ஜோதி தோன்றி வால் நட்சத்திரமாய் வானில் நீந்தி, அருணாசல மலையின் உச்சியில் அடங்கியது. உடல் உதித்தபோது ஒரு ஜோதி, உடலை நீக்கும்போதும் ஒரு ஜோதி. "நான் உடலல்ல; என்றும் ஒளிரும் ஆத்மாதான்" என்று பகவான் கூற்றிற்கு ஏற்ப, இன்றும் திருவண்ணாமலை

ஸ்ரீ ரமணாஸ்ரமத்தில் பகவானின் பரிபூரண சாந்நித்தியம், சாந்தி நிலவுகிறது. எங்கெங்கிருந்தாலும் பகவானை வழிபடும் பக்தர்கள் பரம சாந்தியையும், பூரண மனநிம்மதியையும் பெற்றுக்கொண்டு பரவசம் அடைகிறார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

வாழ்க பகவான் ரமணரின் நாமம்.

பெருகுக அவர்தம் அடியார்கள்.

பணிவுடன்

அன்பன் **M.S.சந்திரசேகர்**

புதுவை ரமணகேந்திரம்

"அன்போடுஉன் நாமம்கேள் அன்பர்தம்
அன்பருக்கு அன்பன் ஆயிடஅருள்
அருணாசலா"

முன்னுரை

ஸ்ரீ அருணாசல அட்சர மணமாலை

பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகள் அண்ணாமலைச் சாரலிலுள்ள விரூபாட்சி குகையில் வசித்த காலம் அது. அவருடைய மெய்யன்பர்கள் தாங்கள் பிட்சை எடுக்கச் செல்லும்போது தங்களுக்கென்று தனியாக ஒரு பாட்டு புனைந்தருளுமாறு பகவானை வேண்டினர். அந்த வேண்டுகோளுக்கு இணங்கி, ஒரு நாள் கிரிவலம் வரும்போது பகவானால் அவருடைய முயற்சி சிறிதுமின்றி உள்ளத்தில் ஊற்றுப் பெருகுவதுபோல் தோன்றி, பக்தி பரவசத்துடன் எழுதப்பட்ட பாடல்களே அருணாசல அட்சர மணமாலை. அருணாசலக் கடவுளின் மேல் அன்பன் ரமணன், நாயகன்-நாயகி பாவத்தில் எழுதிய இப்பாடல்களின் எண்ணிக்கை 108 என்பதனால், இது அர்ச்சனைக்கு உகந்த தோத்திரப் பாடல்களாம்.

பகவான் அகர வரிசையில் அட்சரங்கள் ஒவ்வொன்றால் ஒவ்வொரு பாடலை ஆரம்பித்து எழுதியதாலும், அவை அருள் மணம் வீசும் பாடல்

பூக்களால் புனைந்த மாலை என்பதாலும், அதற்கு அட்சர மணமாலை என்ற பெயர் சூட்டப்பட்டது. மேலும், அட்சரங்களால் தொடுத்த திருமண மாலை என்றும் கொள்ளலாம். இவை தவிர, அட்ச ரமண மாலை என்று பதம் பிரித்து நோக்கின் அழியாத ரமண பகவானின் ஆத்மமாலை என்று கூறி நாம் பெருமை கொள்ளலாம்.

ரமண பகவான் அருணாசல பகவான் மீது இயற்றிய பாடல்கள் என்பதால் அருணாசல அட்சர மணமாலை என்ற பெயர் நிலைத்தது. இதன் ஒப்பில்லாச் சிறப்பு எது எனின் தெய்வமே (ரமண பகவானே) தெய்வத்தின்மேல் இயற்றிய பாடல்கள் என்பதாம். அதனால்தான் இப்பாடல்கள் பூரண தெய்வத்தன்மையும், அழிவில்லா சிரஞ்சீவித் தன்மையும் உடையவையாகும்.

அன்பர்கள் இப்பாடல்களின் பொருளைக் கேட்டறிய விரும்பியபோது பகவான், "நீர்தான் அவற்றின் பொருளைச் சொல்லுமே, ஏதாவது நினைத்து எழுதியிருந்தால் அதற்கானப் பொருள்களைக் கூறலாம். எப்படியோ எழுந்தவை அவை" என்று கூறிவிட்டார். பிறிதொரு சமயம் பகவான், "அதற்கு அர்த்தம் அதைப் பாராயணம்

செய்வதுதான்" என்று உறுதியாக அருள் உபதேசம் செய்தார். அன்றிலிருந்து பகவான் பக்தர்கள் அருணாசல அட்சர மணமாலையை வேதமாகப் போற்றி, தினம் ஓதி, நீங்காத செல்வமும், நிறைவான மனநிம்மதியும், சாந்தியும் அடைந்து வருகின்றனர்.

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற நோக்கத்தோடு அனைவரும் எளிதில் இதன் பொருளை உணர்ந்து ஓதுவதற்கு ஏற்ப எழுதப்பட்ட சிறுமுயற்சியே இது. இந்தத் தோத்திரத்தைத் தினம் மனம் உருகிப் பாடுவோர் இக, பர சுகங்கள் அடைவது சர்வ நிச்சயம் என்பது அனுபவ உண்மை.

ஓதுவோருக்கு ஒரு யோசனை...

ஸ்ரீ அருணாசல அட்சர மணமாலையில் வரும் ஒவ்வொரு பாடலிலும் காணும் "அருணாசலா" மற்றும் "நீ" என்ற பெயர்களுக்குப் பதிலாக "ரமணா" என்றும், "நான்", "என்" என்று வரும் இடங்களில் "பக்தனான நம்மையும்" சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப பொருத்திப் பார்த்தால், நமக்குப் பகவானின் தத்துவம், அருள் உபதேசம் நன்கு புலப்படும்.

ஸ்ரீ அருணாசல அட்சர மணமாலை

அருணாசல வரற்குஏற்ற அக்ஷரமண மாலைசாற்றக்
கருணாகர கணபதியே கரம்அருளிக் காப்பாயே.

அருணாசலசிவ அருணா சலசிவ
அருணாசலசிவ அருணாசலா!
அருணாசலசிவ அருணா சலசிவ
அருணாசலசிவ அருணாசலா!

1. அருணாசலம்என அகமே நினைப்பவர்
அகத்தை வேர்அறுப்பாய் அருணாசலா! (அ)

2. அழகு சுந்தரம்போல் அகமும் நீயுமுற்று
அபின்னமாய் இருப்போம் அருணாசலா! (அ)

3. அகம்புகுந்து ஈர்த்துஉன் அககுகை சிறையாய்
அமர்வித்தது என்கொல் அருணாசலா! (அ)

4. ஆருக்கா எனை ஆண்டனை அகற்றிடில்
அகிலம் பழித்திடும் அருணாசலா! (அ)

தெளிவுரை

கருணையே உருவான கணபதியே! அருணாசல நாயகனுக்கு உகந்த அட்சரங்களால், தமிழ் அகரவரிசை எழுத்துக்களால், புனைந்த மணமாலையைச் சூட்ட உன் அருட்கையைக் கொடுத்துக் காப்பாயாக!

அருணா சலசிவ அருணா சலசிவ
அருணா சலசிவ அருணாசலா!
அருணா சலசிவ அருணா சலசிவ
அருணா சலசிவ அருணாசலா!

1. தம் உள்ளத்தின் உணர்வாக அருணாசலம் என தியானிக்கும் பக்தருடைய அகங்காரத்தை நீ வேரோடு அறுத்து நீக்கிவிடுவாய், அருணாசலா!

2. அழகு, சுந்தரம் என்ற இரு சொற்களும் பொருளால் ஒன்றாக இருப்பதுபோல் நானும், நீயும் முழுதும் இரண்டறக் கலந்து ஒன்றாக இருப்போம், அருணாசலா!

3. அருணாசலா! என்னுடைய வீடாகிய மனதில் புகுந்து என்னை பலாத்காரமாக இழுத்துவந்து உன்னுடைய இதயவீட்டில் சிறைப்படுத்தி இருத்தி வைத்துக்கொண்டாய்! இது என்ன விந்தை!

4. நீ யாருக்காக என்னை வலியவந்து ஆட்கொண்டாய்? நான் உன்னிடம் வந்தபின், நீ என்னை உதாசீனமாகக் கைவிட்டால் அனைத்துலகமும் உன்னைத் தூற்றிப்பழித்திடுமப்பா, அருணாசலா!

5. இப்பழி தப்புஉனை ஏன்நினைப் பித்தாய்
இனியார் விடுவார் அருணாசலா! (அ)

6. ஈன்றிடும் அன்னையிற் பெரிதருள் புரிவோய்
இதுவோ உனதருள் அருணாசலா! (அ)

7. உனையே மாற்றி ஓடாது உளத்தின்மேல்
உறுதியாய் இருப்பாய் அருணாசலா! (அ)

8. ஊர்சுற்று உளம்விடாது உனைக்கண்டு அடங்கிட
உன்னழகைக் காட்டு அருணாசலா! (அ)

9. எனையழித்து இப்போது எனைக்கலவா விடில்
இதுவோ ஆண்மை அருணாசலா! (அ)

10. ஏன்இந்த உறக்கம் எனைப்பிறர் இழுக்க
இதுஉனக்கு அழகோ அருணாசலா! (அ)

5. என்னிடம் உதாசீனமாக இருக்கும் இப்பழியிலிருந்து நீ தப்பித்துக்கொள். உன்னையே நான் நினைக்கும்படி நீதான் செய்தாய். இனி உன்னை யார் கை நழுவவிடுவார்? அருணாசலா!

6. பெற்று வளர்த்து பரிவு காட்டும் தாயைவிட அதிகம் இரக்கம் உடையவனே! இதுவா உன் கருணையின் பெருமை? அருணாசலா!

7. அருணாசலா! உன்னை ஏமாற்றிவிட்டு உலக விஷயங்களில் என் மனம் ஓடாதபடி இருக்க, நீ என் மனதை உறுதியாய்ப் பற்றி அதனிடத்திலேயே நிலையாக இருந்து காப்பாயாக!

8. உலக விஷயங்களில் ஓயாது அலையும் என் மனம் உன் தெய்வீக உருவைக் கண்டு, உன்னிடமே ஒடுங்கிவிட உனது பூரண அருளழகைக் காட்டி வசப்படுத்திவிடு, அருணாசலா!

9. என் அகங்காரமான ஜீவபோதத்தை அழித்து இப்பொழுதே என்னை உன்னுடன் இரண்டற சேர்த்துக் கொள்ளாவிடில், உன் பராக்கிரமத்திற்கு அழகாமோ, அருணாசலா!

10. உனக்கு ஏன் இந்தப் போலித் தூக்கம்? புலன் ஆசைகளாகிய துஷ்டர்கள் என்னை இழுத்துச்செல்ல நீ பார்த்தும் பாராமுகமாய் இருக்கின்றாயே, இது உன் பெருமைக்கு அழகல்லவே, அருணாசலா!

11.ஐம்புலக் கள்வர் அகத்தினில் புகும்போது
அகத்தினில்நீ இலையோ அருணாசலா! (அ)

12.ஒருவனாம் உன்னை ஒளித்தெவர் வருவார்
உன்சூதே இது அருணாசலா! (அ)

13.ஓங்காரப் பொருள் ஒப்புயர்வு இல்லோய்
உனையார் அறிவார் அருணாசலா! (அ)

14.ஔவைபோல் எனக்குன் அருளைத் தந்துஎனை
ஆளுவது உன்கடன் அருணாசலா! (அ)

15.கண்ணுக்குக் கண்ணாய்க் கண்இன்றிக்
காண்உனைக்
காணுவது எவர்பார் அருணாசலா! (அ)

16.காந்தம் இரும்புபோல் கவர்ந்துஎனை விடாமல்
கலந்தெனோடு இருப்பாய் அருணாசலா! (அ)

11. அருணாசலா! ஐந்து புலன்களான கள்வர்கள் உனது உறைவிடமான என்னுடைய உள்ளத்தினில் புகும்போது அங்கு நீ இல்லாமல் போய்விட்டாயோ?

12. நீ ஒருவனே நீக்கமற நிறைந்து இருப்பவன். உன்னை மறைத்துவிட்டு யாராவது வரமுடியுமா? இது உன் திட்டமிட்ட சூழ்ச்சியேயாகும், அருணாசலா!

13. நீ ஓங்காரப்பொருள். உனக்கு நிகரானவரோ, உயர்ந்தவரோ யாரும் இல்லை. உன்னை உள்ளபடியே அறியும் திறமை யாருக்கு உளது? அருணாசலா!

14. அன்பில் சிறந்த அன்னையைப்போல், உன்னையே கதியாக வந்த எனக்கு, உன்னுடைய அருளைத் தந்து என்னைக் காப்பது உன்னுடைய கடமைதான், அருணாசலா!

15. பார்க்கின்ற என் கண்ணுக்கு ஒளி தரும் கண்ணாக இருப்பவனே! கண்களின்றியே சகலமும் காணுகின்ற உன்னை எவரால் காண முடியும். ஆகவே என் அகக்கண்ணைத் திறந்து உன் அழகைக் காண தயைகூர்ந்து அருள்வாய், அருணாசலா!

16. காந்தம் இரும்பைத் தன்பால் இழுத்து இருத்திக் கொள்வதுபோல், நீயும் என்னை உன்னிடத்தில் இழுத்து வைத்துக்கொள். என்றும் பிரிந்துவிடாதபடி என்னோடு கலந்து ஐக்கியமாகிவிடு, அருணாசலா!

17. கிரிஉரு ஆகிய கிருபைக் கடலே
கிருபைகூர்ந்து அருளுவாய் அருணாசலா! (அ)

18. கீழ்மேல் எங்கும் கிளர்ஒளி மணியென்
கீழ்மையைப் பாழ்செய் அருணாசலா! (அ)

19. குற்றமுற்று அறுத்தெனைக் குணமாய்ப் பணித்தாள்
குருஉருவாய் ஒளிர் அருணாசலா! (அ)

20. கூர்வார் கண்ணியர் கொடுமையிற் படாதருள்
கூர்ந்துஎனைச் சேர்ந்தருள் அருணாசலா! (அ)

21. கெஞ்சியும் வஞ்சியாய்க் கொஞ்சமும் இரங்கிலை
அஞ்சல்என்றே அருள் அருணாசலா! (அ)

17. ஊனக்கண்ணுக்குக் கடினமான கல் மலையாகத் தோன்றுகிறாய். ஆனாலும், நீ மிகவும் தயவுடைய கருணைக்கடல்! உன் கனிவான கிருபையை எனக்கு அளித்து அருள்வாயாக, அருணாசலா!

18. கீழோர், மேலோர் என்ற பாகுபாடின்றி எல்லோர் இதயத்திலும் அருள்ஒளி வீசிப் பிரகாசிப்பவனே! என் உள்ளத்தைச் சூழ்ந்துள்ள அஞ்ஞான இருளை அகற்றிவிடு, அருணாசலா!

19. குரு உருவாய் பிரகாசிக்கின்ற அருணாசலா! என் அகங்காரம் முதலான எல்லா குற்றங்களையும் முழுமையாக அழித்து, என்னை நற்குணம் படைத்த பக்தனாக்கிக் காத்தருள்வாய்!

20. கூர்மையான வாளுக்கு நிகரான கொடும் பார்வையுடைய வஞ்சகர்கள் விரித்த வலையில் நான் அகப்பட்டுத் தவிக்காமல் இருக்கக் கருணைகூர்ந்து என்னோடு இடையறாது இருப்பாயாக (கொடுமையான இந்திரியங்கள் விரிக்கும் ஆசாபாசவலையில் சிக்காமல் என்னைக் காப்பாயாக) அருணாசலா!

21. நான் உன் அருளுக்காக மன்றாடிக் கெஞ்சி வேண்டுகின்றேன். ஆனால் நீயோ வஞ்சனையாக கொஞ்சமும் இரக்கம் காட்டவில்லை, அருணாசலா! இப்பொழுதாவது, "நீ அஞ்சவேண்டாம், நான் இருக்கிறேன்" என்று அபயம் அளிப்பாயாக.

22.கேளாது அளிக்கும்உன் கேடுஇல் புகழைக்
கேடுசெய்யாது அருள் அருணாசலா! (அ)

23.கையினில் கனிஉன் மெய்ரசம் கொண்டுஉவகை
வெறி கொளவருள் அருணாசலா! (அ)

24.கொடியிட்டு அடியரைக் கொல்லுனைக் கட்டிக்
கொண்டுஎங்ஙன் வாழ்வேன் அருணாசலா! (அ)

25.கோபம்இல் குணத்தோய் குறியாய் எனைக்கொளக்
குறைஎன் செய்தேன் அருணாசலா! (அ)

26.கௌதமர் போற்றும் கருணைமா மலையே
கடைக்கணித்து ஆள்வாய் அருணாசலா! (அ)

22. கேட்காமலேயே கொடுக்கும் வள்ளல் நீ என்ற அழியாத புகழ் உனக்கு இருக்கிறது. நான் இப்போது உன் அருளைக் கேட்டும் கொடாதவன் என்ற பெயர் எடுத்து உன் புகழுக்குக் களங்கம் வராமல் எனக்கு அருள்புரிவாயாக, அருணாசலா!

23. நீ அற்புதக் கனியாக என் கையில் விளங்குகிறாய். இந்த உனது ஆத்ம சொரூப கனியின் ரசத்தை நான் அருந்தி, அதனால் இன்ப வெறிகொண்டு மெய் மறந்து கிடக்க அருள்வாயாக, அருணாசலா!

24. அடியாரின் அகந்தையைக் கொல்வதற்கென்றே உன் அருள் கொடியால் உறுதியாகக் கட்டி அவர்தம் ஜீவபோதத்தை அழிக்கின்றவன் நீ. உன்னுடன் உறவுகொண்டு நானும் தனித்து ஜீவத்தன்மையுடைய ஆளாக எப்படி வாழமுடியும்? அருணாசலா!

25. கோபமே இல்லாத சாந்தசொரூபியே! பக்தர்கள் பலர் இருக்க, உனது அருளுக்கு இலக்காக என்னைத் தேர்ந்து எடுத்து ஆட்கொண்டனையே! அதற்கு நான் என்ன தவம் செய்தேன், அருணாசலா!

26. கௌதம முனியால் போற்றித் துதிக்கப்பட்ட கருணை நிறைந்த அருணாசலா! என்னை கடைக் கண்ணால் நோக்கிக் காப்பாற்றி ஆட்கொள்வாய்.

27.சகலமும் விழுங்கும் கதிரொளி இனமன
சலசம் அலர்த்தியிடு அருணாசலா! (அ)

28.சாப்பாடு உன்னைச் சார்ந்து உணவாயான்
சாந்தமாய்ப் போவன் அருணாசலா! (அ)

29.சித்தங் குளிரக்கதிர் அத்தம்வைத்து அமுத
வாயைத்திற அருண்மதி அருணாசலா! (அ)

30.சீரை அழித்து நிர்வாணமாச் செய்துஅருள்
சீரை அளித்தருள் அருணாசலா! (அ)

31.சுகக்கடல் பொங்கச் சொல்லுணர்வு அடங்கச்
சும்மா பொருந்திடுஅங்கு அருணாசலா! (அ)

27. உலக முழுமையும் உன் அருள் கிரணங்களின் ஒளியினால் விழுங்கும் ஞானசூரியனே! அஞ்ஞானத்தால் சூழப்பட்டு முற்றும் மூடி மொட்டாகவே கிடக்கும் என் இதயத்தாமரையை உனது ஞான அருள் பிரகாசத்தினால் நன்கு விரிந்து மலரும்படி செய்தருள், அருணாசலா!

28. என் ஆத்ம பசிக்கு உணவு வேண்டி நான் உன்னிடம் நெருங்கினேன். ஆனால், நீயோ என்னை, என் அகங்காரத்தைப் பக்குவமாகப் புசித்துவிட்டாய். என் தனித்தன்மையாகிய ஜீவபோதத்தை இழந்து, நான் உன்னோடு கலந்துவிட்டேன். பரமசாந்தி அடைந்தேன். அருணாசலா!

29. அருட்சந்திரனே, மாயவலையில் சிக்கி வறண்டு போன என் சித்தத்தின் வெப்பம் தணியும் வண்ணம், உனது குளிர்ந்த அருள் கிரணங்களாகிய கைகளால், மூடியிருக்கும் என் இதயத்தின் அமுத வாயைத் திறந்து அருள்வாயாக, அருணாசலா!

30. என்னை மூடியிருக்கும் அகங்கார ஆடையை அழித்து, என் ஜீவபோதத்தை முற்றிலும் ஒழித்து, புனிதமான உன் அருள் ஆடையை எனக்கு அளிப்பாயாக, அருணாசலா!

31. என் இதயம் இன்பக் கடலாகப் பொங்கித் ததும்பவும், அந்த பேரின்பத்தினால் வாக்கும் மனமும் ஒருங்கே அடங்கவும், என் இதயத்தில் நீ எழுந்தருளி அமைதியாக வீற்றிருப்பாயாக, அருணாசலா!

32. சூதுசெய்து என்னைச் சோதியாது இனிஉன்
சோதி உருக்காட்டு அருணாசலா! (அ)

33. செப்படி வித்தைகற்று இப்படி மயக்குவிட்டு
உருப்படு வித்தைகாட்டு அருணாசலா! (அ)

34. சேராய் எனின்மெய் நீராய் உருகிக்கண்
நீராற்று அழிவேன் அருணாசலா! (அ)

35. சைஎனத் தள்ளில் செய்வினை கடும்அலால்
உய்வகை ஏதுஉரை அருணாசலா! (அ)

36. சொல்லாது சொலிநீ சொல்லற நில்என்று
சும்மா இருந்தாய் அருணாசலா! (அ)

32. வஞ்சகமான சூழ்ச்சிகள் செய்து இனிமேலும் என்னைச் சோதனைக்கு ஆளாக்காமல் கருணையே உருவான நீ உன் ஜோதி வடிவை எனக்குக் காண்பித்தருள், அருணாசலா!

33. மாயாஜால வித்தைகளை உண்மையென்று கற்றுக்கொண்டு மயங்கும் என்னை, உலக மயக்கத்திலிருந்து விடுபட்டுக் கடைத்தேறும்படியான உன் ஆன்ம வித்தையைக் காட்டி அருள்வாய், அருணாசலா!

34. அருளாளனே! நீ என்னுடன் ஒன்றுசேர்ந்து இருக்கவில்லையானால் எனது உடம்பு தாப வெப்பத்தால் நீராக உருகி, அதனால் கண்ணீர் ஆறாகப் பெருகி, துக்கம் தாளாமல் நான் வெந்து, அழிந்தே போய்விடுவேன், அருணாசலா!

35. நீ என்னைச் சேராமல் சையென்று இகழ்ந்து தள்ளிவிட்டால், முன்செய்த பிராரப்த கர்மங்கள் என்னைச் சுட்டு எரித்துத் தாக்குமே. நான் உய்வதற்கு உன்னைவிட்டால் வேறு கதிதான் என்ன, நீயே சொல், அருணாசலா!

36. "பேசாமல் மௌனமாய் சும்மாயிரு" என்று வாயால் கூறாது மௌன உபதேசம் செய்தாய். அது விளங்க நீயும் அதேபோல் மௌனமாய் சும்மா இருந்தாய், அருணாசலா!

37.சோம்பியாய்ச் சும்மா சுகம்உண்டு உறங்கிடில்
சொல்வேறு என்கதி அருணாசலா! (அ)

38.சௌரியங் காட்டினை சழக்குஅற்றது என்றே
சலியாது இருந்தாய் அருணாசலா! (அ)

39.ஞமலியில் கேடா நான்என் உறுதியால்
நாடிநின் உறுவேன் அருணாசலா! (அ)

40.ஞானம் இல்லாதுஉன் ஆசையால் தளர்வுஅற
ஞானந் தெரித்தருள் அருணாசலா! (அ)

41.ஞிமிறுபோல் நீயும் மலர்ந்திலை என்றே
நேர் நின்றனைஎன் அருணாசலா! (அ)

37. வந்த வேலையைப் பாராமல் உண்ணலும் உறங்கலுமே தொழிலாய் காலத்தைக் கழித்தால் என் கதி என்னாகும் அருணாசலா!

38. உனது அருள் பராக்கிரமத்தைக் காட்டினாய்; உடனே எனது அஞ்ஞான இருள் அகன்றது; நான் அமைதியுற்றேன். இதையறிந்த நீயும் உனது நிலையில் சலனமற்று அமைதியாய் இருந்தாய், அருணாசலா!

39. "நான் என்ன நாயைக்காட்டிலும் கீழ்மையானவனா? எப்படியும் உன்னை அடைந்தே தீருவேன்" என்ற வைராக்கியத்தின் உறுதியால் நான் என்னுள்ளே மோப்பம் பிடித்து, உன்னை அறியும் ஆற்றலைப் பெற்று, உன்னை அடைவேன், அருணாசலா!

40. உன்னை அடைவதற்கான போதிய ஞானம் எனக்கு இல்லை. ஆனால், உன்னை அடையவேண்டும் என்கின்ற தீராத ஆசையிருக்கிறது. அதனால் ஏற்பட்ட தளர்ச்சி நீங்க, உன் விசார ஞானத்தை எனக்கு எளிதாக உணர்த்தியருள்வாயாக, அருணாசலா!

41. நீயும் கேவலம் ஒரு வண்டைப்போல் என்முன் வந்து நின்றுகொண்டு "இன்னும் மலரவில்லையே" என்று கூறலாமா? ஞானசூரியனான நீதானே என் இதயகமலத்தை மலர வைக்கவேண்டும், அருணாசலா!

42. தத்துவம் தெரியாது அத்தனை உற்றாய்
தத்துவம் இதுவென் அருணாசலா! (அ)

43. தானே தானே தத்துவம் இதனைத்
தானே காட்டுவாய் அருணாசலா! (அ)

44. திரும்பி அகந்தனைத் தினம்அகக் கண்காண்
தெரியும் என்றனைஎன் அருணாசலா! (அ)

45. தீரம்இல் அகத்தில் தேடிஉந்தனை யான்
திரும்பஉற்றேன் அருள் அருணாசலா! (அ)

46. துப்பறிவு இல்லா இப்பிறப்பு என்பயன்
ஒப்பிட வாயேன் அருணாசலா! (அ)

42. அது நீ (தத்துவமஸி) என்ற தத்துவத்தை அறிந்து கொள்ளாமலேயே அத்தன்மையான ஆத்ம சொரூபத்தைப் பெற்றாய்! உன்னால் அடையப் பட்டுள்ள இதுவே முடிவான உண்மையென்று உறுதியாகக் கூறி அருள்வாயாக, அருணாசலா!

43. "தான் என்னும் தானே ஆத்மா" என்பது தத்துவப் பொருள். இந்த சுத்த ஞான சொரூபத்தை நீயாகவே எனக்குக் கண்கூடாகக் காட்டியருள், அருணாசலா!

44. "வெளி விஷயங்களிலிருந்து உன் மனதை வைராக்கியத்துடன் அகமுகமாகத் திருப்பி தினமும் இடைவிடாது உள்முகப் பார்வையினால், "நான் யார்?" என்று விசாரித்துத் தெரிந்துகொள். அப்போது தனக்குத் தானே ஆத்மசொரூபம் விளங்கும்; பூரண ஞானம் அடையப்பெறும்" என்று உபதேசித்தாய், அருணாசலா!

45. கரை காணமுடியாத என் இதய வெளியில் உன்னைத் தேடி அலைந்து, இறுதியில் என் உள்ளத்திலேயே உன்னைக் கண்டுகொண்டேன். இது உன் அபார கருணை, அருணாசலா!

46. ஆத்மவிசாரம் செய்ய அறிவில்லாத (திறமை-யில்லாத) இப்பிறப்பால் எனக்கு என்ன பயன்? இப்பிறப்பினை மற்ற எத்துடனாவது ஒப்பிட்டுப் பேச எனக்கு வாய் ஏது? அருணாசலா!

47.தூய்மன மொழியர் தோயும்உன் மெய்அகம்
தோயவே அருள்என் அருணாசலா! (அ)

48.தெய்வமென்று உன்னைச் சாரவே என்னைச்
சேர ஒழித்தாய் அருணாசலா! (அ)

49.தேடாது உற்றநல் திருவருள் நிதிஅகத்
தியக்கம் தீர்த்துஅருள் அருணாசலா! (அ)

50.தைரியமோடும் உன் மெய்யகம் நாடயான்
தட்டழிந்தேன் அருள் அருணாசலா! (அ)

51.தொட்டுஅருள் கைமெய் கட்டிடாய் எனில்யான்
நட்டமாவேன் அருள் அருணாசலா! (அ)

47. அருணாசலா! உன் நிஜ சொரூபத்தில் தூய மனமும், வாக்கும் உடையோர்களே ஒடுங்க முடியும். நானும் அதில் இடம்பெற அருள்புரிவாயாக.

48. என்னைக் காத்து அருளும் தெய்வம் என்று கருதி, இடைவிடாது உன்னையே நினைந்து சரணாகதி அடைந்த என்னை, என் ஜீவபோதமாகிய தனித் தன்மையை ஒருசேர அழித்துவிட்டாய், அருணாசலா!

49. நான் எந்த முயற்சியும் செய்யாமலேயே, தேடிச் செல்லாமலேயே, தானாகவே வலுவில் கிடைத்த திருஅருள் செல்வ நிதியே! உனது ஆத்ம சொரூபத்தை அறியமுடியாமல் கலக்கமடையும் என் மனமயக்கத்தை அகற்றி அருள்வாயாக, அருணாசலா!

50. ஆணவத்தின் தைரியமோடு உன் உண்மை சொரூபத்தை எனது உள்ளத்தே நாடி ஆராய்ந்து அறிய முயற்சித்தேன். அதற்கான தகுதி எனக்கில்லாததனால் நான் அறிவாற்றல் கெட்டு நிலைகுலைந்து அழிந்தேன். இந்த கஷ்டத்தைத் தீர்த்து அருள்புரிவாய், அருணாசலா!

51. உன் அருட்கரங்களால் என்னைத் தொட்டு, என்னோடு இரண்டறக் கலவாவிடில் நான் பிறவிப் பயனை அடையாமல் நஷ்டமாவேன். அவ்வாறு வீணாகாமல் காத்து அருள்வாய், அருணாசலா!

52. தோடம்இல் நீஅகத்தோடு ஒன்றி என்றும்
சந்தோடம்ஒன்றிட அருள் அருணாசலா! (அ)

53. நகைக்குஇடம் இலைநின் நாடிய எனைஅருள்
நகையிட்டுப் பார்நீ அருணாசலா! (அ)

54. நாணிலை நாடிட நானாய் ஒன்றிநீ
தாணுவாய் நின்றனை அருணாசலா! (அ)

55. நின்எரி எரித்தெனை நீறு ஆக்கிடுமுன்
நின்அருள் மழைபொழி அருணாசலா! (அ)

56. நீதான் அறப்புலி நிதம்களி மயமாய்
நின்றிடு நிலைஅருள் அருணாசலா! (அ)

52. அருணாசலா! நீ குற்றமற்றவன்; குணக்குன்று; நீ என் இதயத்தோடு ஒன்றாகி எப்போதும் உன் பேரின்பத்திலேயே திளைத்திருக்க அருள்புரிவாயாக, அருணாசலா!

53. உன்னைக் கதியாக நாடி வந்த என்னை நீ பரிகசிக்க இது நேரமில்லை, நியாயமும் இல்லை. ஆகையால், உன் அருள் புன்னகையினால் என்னை கடாட்சித்து அருள்வாய், அருணாசலா!

54. உன்னை அடையவேண்டும் என்ற ஆசையினால், என் வெட்கத்தையும் விட்டு நானாகவே உன்னைச் சேர வந்தேன். நீயோ சற்றும் வெட்கப்படாமல் தூண்போல் அசைவற்று நிற்கின்றாய்! இது உனக்கு அழகா? அருணாசலா!

55. உனது ஞானாக்கினி என்னைச் சுட்டெரித்துச் சாம்பலாக்கிவிடும். அதற்குமுன், அதை நான் தாங்கிக் கொள்ளும்படியாக என்னுள்ளம் குளிரும்வண்ணம் நின் அருள்மழையை என்பால் பெய்தருள்வாய், அருணாசலா!

56. நீ என்றும் நான் என்றும் உள்ள பேதம் ஒழியுமாறு என்னை அணைத்து, எப்போதும் நித்யானந்தமாய் இருக்கும் நிலையை நீ எனக்கு அருள்வாய், அருணாசலா!

57. நுண்ணுரு உனையான் விண்ணுரு நண்ணிட
எண்அலை இறுமென்று அருணாசலா! (அ)

58. நூலறிவு அறியாப் பேதையன் என்தன்
மால்அறிவு அறுத்தருள் அருணாசலா! (அ)

59. நெக்குநெக்கு உருகியான் புக்கிட உனைப்புகல்
நக்கனா நின்றனை அருணாசலா! (அ)

60. நேசம்இல் எனக்குஉன் ஆசையைக் காட்டிநீ
மோசம் செயாதுஅருள் அருணாசலா! (அ)

61. நைந்துஅழி கனியால் நலன்இலை பதத்தில்
நாடிஉட் கொள்நலம் அருணாசலா! (அ)

57. அருணாசலா! நீ மிகவும் நுட்பமானவன்; எங்கும் நிறைந்தவன்; நான் உன்னைச் சேரத் தடையாக உள்ள எண்ண அலைகள் எல்லாம் உன்னருளால் என்றைக்கு ஒழியுமோ?

58. படிப்பறிவு கொஞ்சமும் இல்லாத மூடன் நான். என் அகந்தையின் மயக்க அறிவை மூலவேருடன் அழித்து உன் மெய் உணர்வை எனக்கு விளக்கி அருள்வாய், அருணாசலா!

59. உடலும், உள்ளமும் உன்பால் அன்பால் உருகி, நீயே அடைக்கலம் என்று நான் சரணடைந்தேன். நீயோ ரூபமற்று, பெயரற்று, பிரம்மாக காட்சியளிக்கின்றாய், அருணாசலா!

60. எனக்கு உன்னிடத்தில் போதிய பக்தியில்லை. நீதான் உன்பால் ஆசையை உண்டாக்கினாய். அதனால், என்னை மோசம் செய்யாது என்னோடு இருந்து அருள்வாய், அருணாசலா!

61. அதிகம் பழுத்து அழிந்த பழத்தால் நலனில்லை. தக்க பதமாய் இருக்கும்போதே அதனை உட்கொள்ள வேண்டும். அதுபோல உன்மேலுள்ள ஆவலால் நான் நைந்து, வெம்பிப் போகுமுன் என்னை ஏற்றுக்கொள், அருணாசலா!

62.நொந்திடாது உன்தனைத்
தந்துஎனைக் கொண்டிலை
அந்தகன் நீஎனக்கு அருணாசலா! (அ)

63.நோக்கியே கருதிமெய் தாக்கியே பக்குவம்
ஆக்கிநீ ஆண்டருள் அருணாசலா! (அ)

64.பற்றிமால் விடம்தலை உற்றுஇறு முனம்அருள்
பற்றிட அருள்புரி அருணாசலா! (அ)

65.பார்த்தருள் மால்அறப் பார்த்திலை எனின்அருள்
பார்உனக்கு ஆர்சொல்வர் அருணாசலா! (அ)

66.பித்துவிட்டு உனைநேர் பித்தன் ஆக்கினைஅருள்
பித்தம் தெளிமருந்து அருணாசலா! (அ)

67.பீதிஇல் உனைச்சார் பீதியில் எனைச்சேர்
பீதிஉன் தனக்குஏன் அருணாசலா! (அ)

62. நான் உடலை வருத்தி, தவம் ஏதும் செய்யவில்லை. இருப்பினும் உன்னை எனக்கு அளித்தாய். அதற்குப் பதிலாக, என்னைக் கொண்டாயே. அதாவது, என் அகங்காரத்தை அழித்த எமன் ஆனாய். இது உன் மறக்கருணை, அருணாசலா!

63. என்னை உன் பார்வையாலும், எண்ணத்தாலும், ஸ்பரிசத்தாலும் பக்குவப்படுத்தி ஆண்டு, அருள்வாயாக, அருணாசலா!

64. உலக ஆசைகள் என்ற பாம்பால் கடிக்கப் பட்டிருக்கிறேன். அதன் விஷம் தலைக்கு ஏறி, என் உயிர் போகுமுன் உன் அருளால் அவ்விஷத்தை முறித்து, என்னைக் காப்பாற்றுவாயாக, அருணாசலா!

65. என்னைக் கருணைகூர்ந்து பார்த்து என் மாயையை அகற்றி அருள்வாய். என்பொருட்டு இவ்வுலகில் உன்னிடம் சிபாரிசு செய்ய யார் இருக்கிறார்கள்? நீதான் எனக்கிருக்கும் ஒரே கதி, அருணாசலா!

66. உலக ஆசையாகியப் பித்தை விட்டு, உன்மேல் பித்துக்கொண்டேன். இந்தப் பித்தும் விட்டுவிட நீதான் மருந்து அருளவேண்டும். அருணாசலா!

67. நீ அச்சமற்றவன்! நானும் உன்னைச் சேர அச்சமின்றி வருகிறேன். என்னுடன் ஒன்றுசேர நீ ஏன் அஞ்சுகிறாய், தயங்குகிறாய் (நான் இன்னும் பக்குவம் ஆகவில்லையா?) அருணாசலா!

68.புல்லறிவு ஏதுஉரை நல்லறிவு ஏதுஉரை
புல்லிடவே அருள் அருணாசலா! (அ)

69.பூமண மாமனம் பூரண மணம்கொளப்
பூரண மணம்அருள் அருணாசலா! (அ)

70.பெயர்நினைத் திடவே பிடித்து இழுத்தனைஉன்
பெருமையார் அறிவார் அருணாசலா! (அ)

71.பேய்த்தனம் விடவிடாப் பேயாப் பிடித்துஎனைப்
பேயன் ஆக்கினைஎன் அருணாசலா! (அ)

72.பைங்கொடியாய் நான் பற்றின்றி வாடாமல்
பற்றுக் கோடாய்க்கா அருணாசலா! (அ)

73.பொடியான் மயக்கிஎன் போதத்தைப் பறித்துஉன்
போதத்தைக் காட்டினை அருணாசலா! (அ)

68. பொய்யறிவு எது? நல்லறிவு எது? என்று விளக்கி அருளுக. உன்னால் விளக்கப்பட்ட மெய்யுணர்வை நான் அடைந்து உன்னுடன் ஒன்றிவிட அன்பாய் அருள்வாய், அருணாசலா!

69. பூலோக வாசனைகளால் ஊறிய மனம், அவைகள் நீங்கி பரிபூரண ஆன்மநிலையை அடையும்படி நான் உன்னோடு முற்றும் ஐக்கியமாகிவிட அருள்வாய், அருணாசலா!

70. அருணாசலம் என்னும் உன் பெயரை நினைத்த மாத்திரத்திலேயே என்னை உன்பால் கவர்ந்திழுத்துக் கொண்டாய். உன் பெருமையை யார் அறியமுடியும்? அருணாசலா!

71. என்னை அகந்தைப் பேய் பற்றிக்கொண்டிருந்தது. அதனை விரட்டி, என்னை நீ விடாப்பிடியாய் பிடித்து, உன் அருள் பித்தன் ஆக்கிக்கொண்டாய், அருணாசலா! என்னே உன் கருணை.

72. பற்றிக்கொண்டு படருவதற்கு கொழுகொம்பின்றி வாடும் பசுங்கொடியைப்போல் நான் வாடாமல் நீ எனக்கு உற்ற துணையாயிருந்து காப்பாயாக, அருணாசலா!

73. உன் திருவருளாகிய சொக்குப்பொடியால் என்னை மயக்கி என் ஜீவபோதத்தை (அகங்காரத்தை) முழுமையாக ஒழித்து உன் ஆத்மபோதத்தைக் (உண்மை சொரூபத்தை) காட்டினாய், அருணாசலா!

74.போக்கும் வரவும்இல் பொதுவெளியினில் அருள்
போராட்டம் காட்டு அருணாசலா! (அ)

75.பௌதிகம் ஆம்உடல் பற்றுஅற்று நாளும்உன்
பவிசுகண்டு உறஅருள் அருணாசலா! (அ)

76.மலைமருந்து இடநீ மலைத்திடவோ அருள்
மலைமருந்தாய் ஒளிர் அருணாசலா! (அ)

77.மானங்கொண்டு உறுபவர் மானத்தை அழித்து
அபிமான மில்லாதுஒளிர் அருணாசலா! (அ)

78.மிஞ்சிடில் கெஞ்சிடும் கொஞ்ச அறிவனியான்
வஞ்சியாது அருள்எனை அருணாசலா! (அ)

79.மீகாமன் இல்லாமல் மாகாற்று அலைகலம்
ஆகாமல் காத்தருள் அருணாசலா! (அ)

74. போவதும் - வருவதும் (இறப்பு, பிறப்பு) இல்லாத இயல்பு நிலையான இதய ஆகாசத்தில் என் அகங்கார அசுரப்படைகளை அழித்து, நீ நடத்தும் அருள் போராட்டத்தை எனக்குக் காட்டிடுவாய், அருணாசலா!

75. ஐந்து பூதங்களாலான உடல்மேல் பற்று அற்று எப்போதும் உன் அற்புத அழகைக் கண்டு உன்னோடு ஒன்றியிருக்க அருள்வாய், அருணாசலா!

76. ஜோதி உருவான அருணாசலா! தேகத்தை நான் என்னும் மலைப்பாகிய அஞ்ஞானத்திற்கு, தெளிவுண்டாகும் ஞானமருந்தை நீ அளித்தபின்னும் நான் மயங்குவேனா! நீ என் மலைப்புக்கு மருந்தாய், மலையே மருந்தாய் விளங்குகின்றாய்!

77. தேகாபிமானம் கொண்டு உன்னிடம் வரும் பக்தர்களது மோகத்தை அடியோடு அழித்து, எவ்வித பற்றும் இல்லாது நீ அவர்கள் உள்ளத்தில் ஒளிர்கின்றாய், அருணாசலா!

78. உலக மயக்கம் என் சக்திக்கு மிஞ்சி, என்னால் பொறுக்க முடியாமல் போனால் மட்டுமே உன்னை நினைத்துக் கெஞ்சி, உன் உதவியை வேண்டுகின்ற அற்ப அறிவுள்ளவன் நான். இக்குறையை மன்னித்து என்னை வஞ்சிக்காமல் அருள்வாய், அருணாசலா!

79. மாலுமி இல்லாமல் கடலில் பெருங்காற்றால் அலைக்கழிக்கப்படும் கப்பலைப்போல் நான் சம்சாரக் கடலில் அகப்பட்டு கரை காணாது தவிக்காமல் இருக்க என்னைக் காத்து இரட்சிப்பாய், அருணாசலா!

80.முடிஅடி காணா முடிவிடுத்து அனைநேர்
முடிவிடக் கடனிலை அருணாசலா! (அ)

81.மூக்கிலன் முன்காட்டும் முகுரம் ஆகாதுஎனைத்
தூக்கி அணைந்துஅருள் அருணாசலா! (அ)

82.மெய்யகத் தின்மன மென்மலர் அணையில்நாம்
மெய் கலந்திடஅருள் அருணாசலா! (அ)

83.மேன்மேல் தாழ்ந்திடும் மெல்லியர்ச் சேர்ந்துநீ
மேன்மை உற்றனைஎன் அருணாசலா! (அ)

84.மைமயல் நீத்துஅருள் மையினால் உனதுஉன்
மைவசம் ஆக்கினை அருணாசலா! (அ)

85.மொட்டை அடித்துஎனை வெட்ட வெளியில்நீ
நட்டம் ஆடினைஎன் அருணாசலா! (அ)

80. அடிமுடி தெரியாத அளவுக்கு சிக்கலான அகந்தை முடிச்சை அன்னையைப்போல் பரிவுகாட்டி நீயே அவிழ்த்து உதவக் கடமைப்பட்டவன் அன்றோ, அருணாசலா!

81. மூக்கில்லாதவன் முன்பு கண்ணாடியைக் காட்டினால் அவன் தாழ்மையைக் (குறையை) காட்டு வதேயாகும். அதுபோல நீ என் குற்றத்தை எடுத்துக் காட்டுபவனாக இல்லாமல் என்னைப் பக்குவப்படுத்தி, உயர்த்தி, உன்னுடன் சேர்த்துக்கொள், அருணாசலா!

82. உடலென்னும் ஆலயத்திலுள்ள மென்மையான தூயஉள்ளம் என்னும் மலர்படுக்கையில் நாமிருவரும் இரண்டறக் கலந்திட எனக்கு அருள்புரிந்திடு, அருணாசலா!

83. மேலும், மேலும் தாழ்ந்து, அடக்கமும் பணிவும் உடைய எளிய பக்தர்களுடன்சேர்ந்து, நீ மேன்மை பெற்று விளங்குகிறாய், அருணாசலா!

84. என் அஞ்ஞான இருட்டை உன் திருவருளால் அழித்து, உன் அருள் மையினால் என்னை அலங்கரித்து, உன் மெய்யுணர்வின் வசமாக்கினை. என்னே உன் அபார கருணை, அருணாசலா!

85. என் ஆணவத்தை அறவே அழித்து, ஆத்மாவாகிய இதயப் பரவெளியில் நீ அருள்நடனம் ஆடினாய், அருணாசலா!

86.மோகம் தவிர்த்துஉன் மோகமா வைத்தும்என்
மோகம் தீராய்என் அருணாசலா! (அ)

87.மௌனியாய்க் கல்போல் மலராது இருந்தால்
மௌனம் இதுஆமோ அருணாசலா! (அ)

88.யவன்என் வாயில் மண்ணினை அட்டி
என்பிழைப்பு ஒழித்தது அருணாசலா! (அ)

89.யாரும் அறியாதுஎன் மதியினை மருட்டி
எவர்கொளை கொண்டது அருணாசலா! (அ)

90. ரமணன்என்று உரைத்தேன் ரோசம் கொளாதுஎனை
ரமித்திடச் செயவா அருணாசலா! (அ)

91.ராப்பகல் இல்லா வெறுவெளி வீட்டில்
ரமித்திடு வோம்வா அருணாசலா! (அ)

86. உலகத்தின் மேலுள்ள என் மோகத்தை அழித்து, உன்மேல் மோகத்தைக் கொடு. பிறகு அந்த மோகத்தையும் அறவே அழித்து அருள்புரிவாய், அருணாசலா!

87. வாயினால் மட்டும் பேசாதவனாய், மனதில் தெளிவில்லாமல் கல்மாதிரி கிடந்தால், அது உண்மையான மௌனம் ஆகுமா, அருணாசலா!

88. உலகத்தின் ருசி தெரியாதவாறு என் வாயில் மண்ணைப் போட்டு எனக்கு என்று ஒரு தனிப்பிழைப்பு இல்லாமல் ஒழித்தது உன்னைத் தவிர வேறு யாராக இருக்கமுடியும், அருணாசலா!

89. யாரும் அறிந்துகொள்ள முடியாதவாறு என் புத்தியை மயக்கி, கொள்ளையடித்து, உன் வசம் ஆக்கியது உன்னைத்தவிர, வேறு யாராக இருக்கமுடியும், அருணாசலா!

90. அடியார்களை விரும்பி, அவர்களோடு இன்புற்றிருப்பவன் என்று பகிரங்கமாக உன்னைச் சொன்னதனால் கோபம் கொள்ளாது, என்னை இன்புறச் செய்ய வா, அருணாசலா!

91. இரவு-பகலற்ற, கால - தேச பேதமற்ற, சுத்த இதய ஆகாசத்தில் பேரானந்தம் அடைந்திருப்போம், வா! அருணாசலா!

92.லட்சியம் வைத்துஅருள் அஸ்திரம் விட்டுஎனைப்
பட்சித்தாய் பிராணனோடு அருணாசலா! (அ)

93.லாபநீ இகபர லாபம்இல் எனைஉற்று
லாபம்என் உற்றனை அருணாசலா! (அ)

94.வரும்படி சொலிலை வந்துஎன் படிஅள
வருந்திடுஉன் தலைவிதி அருணாசலா! (அ)

95.வாவென்று அகம்புக்குஉன்
வாழ்வுஅருள் அன்றேஎன்
வாழ்வுஇழந்தேன் அருள் அருணாசலா! (அ)

96.விட்டிடில் கட்டமாம் விட்டிடாது உனைஉயிர்
விட்டிட அருள்புரி அருணாசலா! (அ)

92. என்னைக் குறியாக வைத்து, உன் அருள் அம்பை ஏவி, என் அகங்காரத்தையும், பிராணனையும் சேர்த்து நீ அடியோடு உண்டு தீர்த்துவிட்டாய், அருணாசலா!

93. உன்னை அடைந்தவர்க்கு நீ பரிபூரண இலாபப் பொருளே. இகத்திலோ, பரத்திலோ என்னால் எவ்வித இலாபமும் இல்லை. அப்படிப்பட்ட என்னை நீ பெற்றதால், நீ அடைந்த இலாபம்தான் என்ன? அருணாசலா!

94. நீதானே என்னை உன்னிடம் வரும்படி அழைத்தாய்! ஆகவே நீயேதான் வந்து எனக்கு உன் அருளைத் தரவேண்டும். இதற்காக உனக்குக் கஷ்டமென்றால், அது உன் தலைவிதியின் செயல்தான், அருணாசலா!

95. நீ என்றைக்கு என் இதயத்தில் புகுந்து, உன்னிடம் வாவென்று அழைத்து, உன் அருள் வாழ்வைத் தந்தாயோ, அன்றைக்கே நான் என் ஜீவபோதத்தை முழுமையாக இழந்தேன். இனி யாவும் உன் அருள்தான், அருணாசலா!

96. நீ என்னைக் கைவிட்டுவிட்டால் அது எனக்குப் பெரிய கேடாகும். ஆகையால் இறுதிக்காலத்தில் உன் நினைவிலேயே, உன்னை மறந்துவிடாமல், உனது தியானத்திலேயே நான் உயிர்விடும்படி அருள்புரிந்திடு, அருணாசலா!

97.வீடுவிட்டு ஈர்த்துஉள வீடுபுக்குப் பையஉன்
வீடுகாட்டினை அருள் அருணாசலா! (அ)

98.வெளிவிட்டேன் உன்செயல் வெறுத்திடாது உன்அருள்
வெளிவிட்டு எனைக்கா அருணாசலா! (அ)

99. வேதாந்தத்தே வேறுஅற விளங்கும்
வேதப் பொருள்அருள் அருணாசலா! (அ)

100.வைதலை வாழ்த்தா வைத்துஅருள் குடியா
வைத்துஎனை விடாதுஅருள் அருணாசலா! (அ)

101.அம்புவில் ஆலிபோல் அன்புஉரு உனில்எனை
அன்பாக் கரைத்துஅருள் அருணாசலா! (அ)

97. உனது அருள் வல்லமையினால் என்னை என் மனவீட்டிலிருந்து பலாத்காரமாக வெளியே இழுத்து, ஞானமாகிய இதயவீட்டில் புகுத்தி, மெல்ல, மெல்ல உன் மோட்ச வீட்டினைக் காட்டி அருளினை, அருணாசலா!

98. நீ எனக்கு அருள் செய்ததை, உன் அருள் லீலையை உலகறிய வெளிப்படையாகக் கூறிவிட்டேனே, அதற்காக என்னை வெறுக்காமல் உன் அருளைப் பொழிந்து காப்பாயாக, அருணாசலா!

99. "நான் வேறு, நீ வேறு" என்னும் பேதபாவம் அற்ற பரம்பொருளாக வேதாந்தத்தில் விளக்கப்பட்டுள்ள உண்மைப் பொருளை (தான் பிரம்மம் என்பதை) எனக்கு உணர்த்தி அருள்வாய், அருணாசலா!

100. என் வசைமொழிகளை எல்லாம் வாழ்த்தாக எடுத்துக்கொண்டு, என்னை உன் அடியார்களில் ஒருவனாக ஏற்றுக்கொண்டு, என்னை விடாது அருள்புரிவாயாக, அருணாசலா!

101. தண்ணீரில் ஆலங்கட்டி கரைந்து ஒன்றாவது போல், அன்பே உருவான உன்னிடத்தில் என்னை அன்புடன் இரண்டறக் கரைத்து அருள்வாய், அருணாசலா!

102.அருணைஎன்று எண்ணயான்
அருள்கண்ணி பட்டேன்உன்
அருள்வலை தப்புமோ அருணாசலா! (அ)

103.சிந்தித்து அருள்படச் சிலந்திபோல் கட்டிச்
சிறையிட்டு உண்டனை அருணாசலா! (அ)

104.அன்பொடுஉன் நாமம்கேள்
அன்பர்தம் அன்பருக்கு
அன்பன் ஆயிடஅருள் அருணாசலா! (அ)

105.என்போலும் தீனரை இன்புறக் காத்துநீ
எந்நாளும் வாழ்ந்துஅருள் அருணாசலா! (அ)

106.என்புருகு அன்பர்தம்
இன்சொற்கொள் செவியும்என்
புன்மொழி கொளஅருள் அருணாசலா! (அ)

102. அருணாசலா என்று உன்னை நான் எண்ணியதுமே நான் உன் அருள்வலையில் அகப்பட்டுக் கொண்டேன். உன்னை நினைத்தவர்கள் அந்த வலையிலிருந்து தப்பமுடியுமா, அருணாசலா!

103. உன்னிடம் நான் வசப்படவேண்டும் என்று என்னைப் பற்றி சிந்தித்து, சிலந்திபோல் உன் அருள்வலையைக் கட்டி, என்னை அதில் சிறையிட்டுச் சாப்பிட்டுவிட்டாய், அருணாசலா!

104. மிகப் பிரியத்துடன் அருணாசலா எனும் உனது நாமத்தைக் காதாரக் கேட்டு அகமகிழும் அன்பர்களின் அன்பர்களுக்கு நான் அன்பனாக இருக்கும்படி எனக்கு நீ அருள்புரிவாய், அருணாசலா!

105. என்னைப் போன்ற கதியற்ற, எளிய அன்பர்கள் எல்லாம் ஆனந்தமாக வாழ அவர்களுக்கு பிரும்மானந்தத்தை அளித்துக் காப்பாற்றி, நீ என்றென்றும் வாழ்ந்தருள்வாய், அருணாசலா!

106. அன்பினால் எலும்பையும் உருக்கும் மெய்யடியார்களின் இனிய மொழிகளைக் கேட்டு மகிழும் உன் செவிகள், எனது சுவையற்ற, பிழையான வாசகங்களையும் கேட்டுப் பொறுத்து அருளவேண்டும், அருணாசலா!

107.பொறுமையாம் பூதர புன்சொலை நன்சொலாப்
பொறுத்துஅருள் இஷ்டம்பின் அருணாசலா!
(அ)

108.மாலை அளித்து அருணாசல ரமணஎன்
மாலை அணிந்துஅருள் அருணாசலா! (அ)

அருணா சலசிவ அருணா சலசிவ
அருணா சலசிவ அருணாசலா!
அருணா சலசிவ அருணா சலசிவ
அருணா சலசிவ அருணாசலா!

அருணாசலம் வாழி அன்பர்களும் வாழி
அக்ஷர மணமாலை வாழி!

107. பொறுமையே வடிவான மலையே! எனது குற்றமுள்ள சொற்களையும் அற்பமான மொழிகளையும் நீ விரும்பும் துதியாகக் கொண்டு, குற்றம் பொறுத்து அருளக் கெஞ்சுகிறேன். பிறகு உனக்கு இஷ்டமானது எதுவோ அதைச் செய். அருணாசலா!

108. எனக்கு உன்னிடம் தீவிரபக்தி உண்டாகும்படி உனது அருள் மாலையை எனக்கு அணிவித்து, எனது இந்த அட்சர மணமாலையை நீ அணிந்துகொண்டு அருள்வாய், அருணாசல ரமணா!

அருணாசல சிவ அருணாசல சிவ
அருணாசல சிவ அருணாசல சிவ
அருணாசல சிவ அருணாசல சிவ
அருணாசல சிவ அருணாசல சிவ

அருணாசலன் நாமம் வாழ்க!
அவனை அன்பால் வழிபடும் அடியார்கள் வாழ்க!
இந்த துதிப்பாடலாகிய அட்சர மணமாலை வாழ்க!

ஸ்ரீ ரமண பகவானின் பிறந்த நாள்

ஸ்ரீ ரமண பகவானுக்குப் பிறப்பு ஏது? இறப்பு ஏது? அவர் என்றும் நின்று நிலைத்திருக்கும் அழிவில்லா ஆத்மஜோதி அல்லவா! உண்மை இவ்வாறு இருக்க, ஸ்ரீ பகவானின் பிறந்த நாள் என்று ஒரு நாளைக் குறிப்பிட்டு அதை ஏன் நாம் வாழையடி வாழையாகக் கொண்டாடி மகிழ்கிறோம். முதலில் பிறந்த நாள் என்பது என்ன என்று பகவானையே கேட்போம். அவர் கூறுகிறார் : "நமது அகங்காரத்தின் மூலத்தைக் கண்டு அதை வேரோடு அழித்து, என்றும் ஏகமாய் விளங்கும் மெய்ப்பொருளில் நாம் ஐக்கியப்படுகின்ற அந்த நன்னாளே உண்மையில் நாம் பிறந்த நாளாகும்" என்பதே பகவானின் விளக்கமாகும்.

ஆனால், நாம் கொண்டாடும் நம் பிறந்த நாளெல்லாம், நம் கர்ம வினைப்படி அகங்கார தோஷங்களோடு கூடிய இந்த நம் உடல் உலகில் ஜனித்த நாளைத்தானே. பகவானின் விளக்கப்படி நம் உண்மையான பிறந்த நாளை நாம் அடைய அவருடைய அபார கருணையினால் அவர் தெளிவாகவும், எளிமையாகவும் கூறிய "நான் யார்?" என்ற விசார மார்க்க உபதேசத்தை உறுதியாகக் கடைபிடித்து இடையறாது முயற்சி

செய்து, அவர் நம்மிடம் எதிர்பார்க்கும் நம் உண்மை நிலையாகிய, அதாவது, நாம் கட்டுப்பாடுகள் இல்லாத பரிபூர்ண ஆத்மாதான் என்ற உணர்வை அடையவேண்டும்.

இத்தகைய அழிவற்ற ஆத்மசுகத்தை நாம் பெறுவதற்கான நேர் உபதேசத்தை நமக்குப் போதிப்பதற்காகவே, நமக்காகவே, நாம் உய்வதற் காகவே, நாம் இக-பர சுகங்கள் அடைவதற்காகவே நம்மிடையே நம்மைப்போல் மானிட உடல் தாங்கி பிறப்பு எடுத்துக்கொண்டவர் நம் பகவான். அவர் இப்பூவுலகில் மானிடராக மலர்ந்த திருநாள் 30.12.1879. அந்த நாள் நம் எல்லோருடைய வாழ்க்கைக்கும் மிக, மிக முக்கியமான நாள். நமது உண்மை நிலையை நமக்கு உணர்த்தி, அதை அடைய வழிகாட்ட வந்த அற்புத ஆசான் ஸ்ரீ ரமண பகவான் மானிடவுரு எடுத்த மகத்தான பொன்னாள்.

அவரது நினைவு நமக்கு நீங்காத செல்வம். அவரது உபதேசம் நாம் உய்வதற்கு வாய்த்த எளிதான உபாயம். அவர் வாழ்ந்து காட்டிய வழி, சொல்லாமல் சொன்ன மௌனமொழி, நம்மைப் பேரின்பத்திற்கு அழைத்துச் செல்லும் நேர்வழி.

அவரது கனிவான காந்தக் கண்கள் இடையறாது அருளைப் பொழிந்து நமக்கு

என்றென்றும் ஆறுதலும், அபயமும் அளிக்கும் தெய்வீகச் சின்னங்கள். ஓர் ஒப்பற்ற ஞானியின் கருணைக் கடாட்சம் இன்றும், என்றும் அவரது நினைவலைகளாக நம்மீது வீசுவது நாம் செய்த பெரும் பாக்கியம்.

இத்தகைய உத்தமமான ஜீவன்முக்தரான ஸ்ரீ ரமண பகவானின் மானிட உடல் உதித்த நாளைக் கொண்டாடுவதன் மூலம் நாம் அவரது நீங்காத நினைவையும், ஈடு இணையற்ற உபதேசத்தையும், மேலும், மேலும் ஆழமாகச் சிந்தித்து, அவர்பால் பொங்கி வழியும் நமது நன்றிப் பெருக்கை நம்மிடையே நாம் பகிர்ந்துகொண்டு பேருவகை எய்துகிறோம்.

வாழ்க ஸ்ரீ ரமண பகவானின் நாமம்.


பெருகுக அவர்தம் அடியார்கள்

அன்பொடுஉன் நாமம்கேள் அன்பர்தம் அன்பருக்கு
அன்பன் ஆயிட அருள் அருணாசலா.

பணிவுடன் அன்பன்,

- M.S.சந்திரசேகர்,

புதுவை ரமணகேந்திரம்



அன்பொடுஉன் நாமம்கேள் அன்பர்தம் அன்பருக்கு
அன்பன் ஆயிட அருள் அருணாசலா

பகவான் ஸ்ரீ ரமணரைப் பற்றிய வாழ்க்கை
உபதேசங்களை அறிய முகவரி :

ஸ்ரீ ரமணாச்ரமம்
திருவண்ணாமலை - 606 603
மின்னஞ்சல் : ashram@ramana-maharshi.org
இணையதளம் : www.ramana-maharshi.org

புதுவை ரமணகேந்திரம்
35, காமராஜர் சாலை, தட்டாஞ்சாவடி,
பாண்டிச்சேரி - 605 009.
மின்னஞ்சல் : ramanachandra@rediffmail.com